ORIGINAL ARTICLE

# நுண்ணிய வாசிப்பு அணுகுமுறையைப் பயன்படுத்தி கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்துதல்

## [NUNNIYA VAASIPPU ANUKUMURAIYAI PAYANPADUTTI KATTURAI EZUTHUM THIRANAI MEEMPADUTHUTHAL]

## IMPROVE ESSAY WRITING SKILLS BY USING CRITICAL READING APPROACH

**மோ. மீனு*[1] / M.Menu *[1]**

[1] Department of Moden Languge, Universiti Pendidikan Sultan Idris, Malaysia.
Email: d074779@siswa.upsi.edu.my

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/125

**Abstract**

Based on the Secondary school Tamil language standard curriculum form 2 students must eventually become capable of creating multiple forms of writing. Thus, this study has been conducted to evaluate students' writing ability through the Bloom's Taxonomy 1956 theory using a critical reading approach. This study is based on three objectives that assessing students' essay writing quality before critical reading, assessing students' writing quality after critical reading, and examining the perspective of critical reading approach. All data were collected and analysed from a test sheets, questionnaire and essay marking scheme. The students were evaluated by a post test to determine the effectiveness of the teaching of learning about critical reading applications in essay writing at the end of this study it was realized that critical reading approach can improve essay writing.

**Key Words**: Critical reading, essay writing, form two students, application level (Bloom's Taxanomy, 1956), teachers, students

**ஆய்வுச் சாரம்**

2018-ஆம் ஆண்டு தமிழ்மொழிக்கான தர அடிப்படையிலான கலைத்திட்டத்தில், இரண்டாம் படிவ மாணவர்களின் கற்றல் கற்பித்தல் இறுதியில் பல்வகை எழுத்துப் படிவங்களைப் படைத்தல் எனும் திறனை அடைந்திருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. அவ்வகையில், நுண்ணிய வாசிப்பு அணுகுமுறையைப் பயன்படுத்தி புளூம் தெக்ஸனமி கோட்பாட்டின் வழி மாணவர்களின்

கட்டுரை எழுதும் திறனை மதிப்பிடும் வகையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வு நுண்ணிய வாசிப்பிற்கு முன் மாணவர்களின் கட்டுரை எழுதும் தரத்தினை மதிப்பிடுதல், நுண்ணிய வாசிப்பிற்குப் பின் மாணவர்களின் கட்டுரை எழுதும் தரத்தினை மதிப்பிடுதல் மற்றும் நுண்ணிய வாசிப்பு அணுகுமுறையின் மீதான கண்ணோட்டத்தை ஆராய்தல் என மூன்று நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இவ்வாய்வின் தரவுகள் அனைத்தும் தேர்வுத்தாள், கருத்தறி வினாநிரல், கட்டுரை மதிப்பெண் அட்டவணை ஆகியவற்றிலிருந்து திரட்டப்பட்டுப் பகுப்பாய்வுச் செய்யப்பட்டன. இந்த ஆய்வின் முடிவில் நுண்ணிய வாசிப்பின் வழி கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்த முடியும் என்பது அறியப்பட்டது.

**கருச்சொற்கள்:** நுண்ணிய வாசிப்பு, கட்டுரை, இரண்டாம் படிவ மாணவர்கள், பயன்கொள்ளல் படிநிலை, ஆசிரியர்கள், மாணவர்கள்

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 5th December 2020, revised 8th January 2021, accepted 30th January 2021

**முன்னுரை**

மலேசிய கல்வித்திட்டத்தில் 2017-ஆம் ஆண்டில் கல்வி அமைச்சு இடைநிலைப்பள்ளிகளுக்கான தர அடிப்படையிலான கலைத்திட்டத்தை அறிமுகம் செய்தது. இத்தர ஆவணம் மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்பட்டு இடைநிலைப்பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட தமிழ்மொழிப் பாடத்திட்டமாக வெளியாக்கப்பட்டது (Kementerian Pelajaran Malaysia, 2017)[1]. 2018-ஆம் ஆண்டு தமிழ்மொழிக்கான தர அடிப்படையிலான கலைத்திட்டத்தில், இரண்டாம் படிவ மாணவர்களின் கற்றல் கற்பித்தல் இறுதியில் பல்வகை எழுத்துப் படிவங்களைப் படைத்தல் எனும் திறனை அடைந்திருக்க வேண்டும் என்பதை மலேசியக் கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவு வலியுறுத்துகிறது (Kementerian Pelajaran Malaysia, 2018)[2].

அவ்வகையில், எழுதுதல் என்பது நம் அன்றாட வாழ்க்கை நடவடிக்கையில் ஒன்றாகும். காகிதத்தில் நமது சிந்தையில் தோன்றிய கருத்துகளை எழுதுவதே எழுத்துப் படிவமாகும் (Arivunambi, 2006)[3]. தொடக்கப்பள்ளி முதல் இடைநிலைப்பள்ளி வரை கல்வியில் மாணவர்களின் அடைவுநிலையை நிர்ணயப்பதில் கட்டுரை ஒரு முக்கியப் பங்கை வகிக்கின்றது. கட்டுரை எழுதுவதன் மூலம் மாணவர்களின் படைப்பாற்றலைச் செம்மைப்படுத்த முடியும். எழுத்துத் திறன்வழி மாணவர்கள் ஏடல்கள், கருத்துக்கோல்கள், அனுபவங்கள், கற்றலின் வழியாகப் பெற்ற அறிவுப்புலம் ஆகியவற்றை வெளியிட முடியும். இத்திறன்வழி மாணவர்கள் பல்வகை எழுத்துப் படிவங்களைக் குறிப்பெடுத்துப் படைப்புகளை உருவாக்க முடியும் (Rajendran, 2008)[4].

கட்டுரையில் பல வகைகள் இருப்பினும், இவ்வாய்விற்குப் பயன்படுத்தப்படுவது ஒரு சொல் கட்டுரையாகும். ஒரு சொல் கட்டுரையானது ஒரு சொல்லைக் கொண்டு மட்டுமே தயாரிக்கப்பட்ட தலைப்பாகும். உதாரணத்திற்கு, கணினி, நூலகம், சாலை விபத்து, தமிழர் திருநாள் மற்றும் பல (Balasubramaniam, 1994)[5]. மாணவர்களின் ஒரு சொல் கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்துவதற்குப் பல வழிமுறைகள் உள்ளன. அவ்வழிமுறைகளில் ஒன்றுதான் நுண்ணிய வாசிப்பாகும்.

ஆரம்பப்பள்ளி முதல் இடைநிலைப்பள்ளிகள் வரை இக்கட்டுரைகளைப் போதிக்க ஆசிரியர்களுக்கு முக்கியமான கருவியாகத் திகழ்வது வாசிப்பாகும். அந்த வாசிப்பு எனும் கருவியை ஒரு சொல் கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்துவதற்கும் பயன்படுத்த முடியும். நுண்ணிய வாசிப்பின் வழி மாணவர்கள் வாசித்தப் பகுதியைப் பொருட்பெயர்த்து, பகுத்துத் தொகுத்து, மதிப்பீடு செய்வர். நுண்ணிய வாசிப்பானது மாணவர்கள் ஒரு வாசிப்புப் பனுவலை வாசித்து அதிலுள்ள கருத்துகளை உள்வாங்கி அதனை வெளிப்படுத்த உதவுகின்றது (Moreillan, 2007)[6]. மாணவர்கள் கட்டுரைகளில் புதியக் கலைச்சொற்கள், மொழியணிகள், புதியப் பொதுத் தகவல்கள் மற்றும் பத்தியமைப்பு முறை அனைத்தையும் தங்களின் கட்டுரைகளில் உட்படுத்த நுண்ணிய வாசிப்பானது துணைப்புரிகின்றது. மாணவர்கள் வாசிக்கும் கருத்துகளை உள்வாக்கி அதனைச் சொந்த மொழிநடையில் கட்டுரை வடிவத்தில் வெளிக்கொணர்வதற்கு நுண்ணிய வாசிப்பு உதவுகின்றது (Mohathir Jamaludin, 2000)[7].

இந்த நுண்ணிய வாசிப்பின் வழி மாணவர்களின் கட்டுரை எழுதும் திறனின் அடைவுநிலையை மதிப்பிட வாய்ப்புகள் உள்ளன. அவ்வகையில் இடைநிலைப்பள்ளியில் இரண்டாம் படிவ மாணவர்களுக்குக் கட்டுரை எழுதும் திறனும் வாசிப்புத் திறனும் கற்பிக்கப்படுவதால் அம்மாணவர்களை முன்னிலைப் படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## ஆய்வு நோக்கம்

இந்த ஆய்வின் பொது நோக்கமானது நுண்ணிய வாசிப்பின் அணுகுமுறையைப் பயன்படுத்தி மாணவர்களின் கட்டுரை எழுதும் திறனை மதிப்பிடுதல் ஆகும். அவ்வகையில் இவ்வாய்வு மூன்று சிறப்பு நோக்கங்களுடன் இயங்கியது. முதல் நோக்கமானது நுண்ணிய வாசிப்பிற்கு முன் மாணவர்களின் கட்டுரை எழுதும் தரத்தினை மதிப்பிடுதலாகும். நுண்ணிய வாசிப்பிற்குப் பின் மாணவர்களின் கட்டுரை எழுதும் தரத்தினை மதிப்பிடுதல் என்பது இரண்டாம் நோக்கமாகும். மூன்றாம் நோக்கமானது நுண்ணிய வாசிப்பு அணுகுமுறையின் மீதான கண்ணோட்டத்தை ஆராய்தலாகும்.

**ஆய்வு நெறிமுறைகள்**

இவ்வாய்வுப் பண்புசார் முறையில் கையாளப்பட்டுள்ளது. இந்த ஆய்வு சிரம்பான் வட்டாரத்தில் அமைந்துள்ள ஓர் இடைநிலைப்பள்ளியில் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்விற்குத் தமிழ்மொழிப் பாடத்தைத் தேர்வுப் பாடமாக எடுக்கும் 10 இரண்டாம் படிவ மாணவர்கள் உட்படுத்தப்பட்டனர். இவ்வாய்வில் ஒரு சொல் கட்டுரை மட்டுமே பயன்படுத்தப்பட்டது. மேலும், ஒரு சொல் கட்டுரை தலைப்பான 'தூய்மைக்கேடு' என்ற தலைப்பே இவ்வாய்விற்குப் பயன்படுத்தப்பட்டது.

நுண்ணிய வாசிப்பிற்கு முன்னும் பின்னும் மாணவர்களின் கட்டுரை எழுதும் திறனை மதிப்பிடுவதற்கு முன்னறித் தேர்வும் பின்னறித் தேர்வும் ஆய்வுக் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டன. நான்கு வாரங்களாக மாணவர்களுக்கு நுண்ணிய வாசிப்புத் தொடர்பான கற்றல் கற்பித்தல் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாய்வில் மேற்கொள்ளப்பட்ட கற்றல் கற்பித்தல்கள் அனைத்தும் புளூம் கோட்பாட்டின் ஒரு படிநிலையான பயன்கொள்ளலை அடிப்படையாகக் கொண்டே மேற்கொள்ளப்பட்டவையாகும். மாணவர்களின் கட்டுரைத் தரம் மொழியணிகள் பயன்பாடு, இலக்கணப் பிழைகள், கலைச்சொற்கள் பயன்பாடு மற்றும் பத்தியமைப்பு முறையைப் போன்ற கூறுகளின் அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் நான்கு வாரக் கற்றல் கற்பித்தலுக்குப் பின் நுண்ணிய வாசிப்பு மாணவர்களுக்குப் பயனுள்ளதாக அமைந்தது என்பதை உறுதி செய்துகொள்ள மாணவர்களுக்குப் பின்னறித் தேர்வு வழங்கப்பட்டது. இறுதியாக, கருத்தறி வினாநிரலின் மூலம் திரட்டப்பட்டத் தரவுகளின் வழி மாணவர்களிடையே நுண்ணிய வாசிப்பின் மீதான கண்ணோட்டம் கண்டறியப்பட்டது.

**ஆய்வுக் கண்டுபிடிப்பு**

ஆய்வின் கண்டுபிடிப்புகள் முன்னறித் தேர்வு, பின்னறித் தேர்வு மற்றும் கருத்தறி வினாநிரலைக் கொண்டு முடிவுச் செய்யப்பட்டன. முன்னறித் தேர்வின் வழி மாணவர்கள் கட்டுரை எழுதுவதில் எதிர்நோக்கும் சிக்கல்கள் கண்டறியப்பட்டன. பெரும்பாலான மாணவர்களின் கட்டுரைகள் சாதாரண மொழிநடையிலேயே இருந்தன. மாணவர்களின் கட்டுரைகளில் புதிய கலைச்சொற்கள், மொழியணிகள், இலக்கணப் பிழைகள், மற்றும் பத்தியமைப்பு முறை போன்றவைத் தென்படவில்லை. அதுமட்டுமின்றி, மாணவர்களுக்குப் புதிய சொற்கள் மற்றும் மொழியணிகளின் பயன்பாடு சரியாக அறிந்திருக்காததால் மாணவர்களின் முன்னறித் தேர்வில் கலைச்சொற்களையும் மொழியணிகளையும் பயன்படுத்தவில்லை. இதனால் அதிகமான மாணவர்கள் 'D' மற்றும் 'E' தரத்திலான அடைவுநிலையையே பெற்றனர்.

நான்கு வாரக் கற்றல் கற்பித்தலுக்குப் பிறகு, மாணவர்கள் மொழியணிகளையும் கலைசொற்களையும் கற்றுக்கொண்டு தங்களின் கட்டுரைகளில் பயன்படுத்தினர். அதுமட்டுமின்றி, மாணவர்களின் பத்தியமைப்பு முறைகளிலும் மாற்றம் ஏற்பட்டிருந்தன. இதனால், மாணவர்களின் கட்டுரை தரத்தில் மாற்றம் ஏற்பட்டு ‘D’ தரத்திலிருந்து ‘C’ தரத்திற்கும் ‘C’ தரத்திலிருந்து ‘B’ தரத்திலான அடைவுநிலையைப் பெற்றனர். மேலும், மாணவர்களின் முன்னறித் தேர்வின் கட்டுரைகளில் அதிகமான இலக்கணப்பிழைகள் கண்டறியப்பட்டன. முன்னறித் தேர்வில் அதிகமான பிழைகளைச் செய்திருந்தனர். உதாரணத்திற்கு, எழுத்துப்பிழைகள் மற்றும் வலிமிகும், வலிமிகா இடங்களில் அதிகமான பிழைகள் செய்திருந்தனர்.

மேலும், முன்னறித் தேர்வில் மாணவர்களின் கட்டுரைகளில் பத்தியமைப்பு முறை சரியாக எழுதப்படவில்லை. மாணவர்கள் தவறான கருத்துகள் அல்லது தலைப்பை ஏற்காத கருத்துகளை எழுதி பத்தியமைப்பு முறையில் பிழை செய்கின்றனர். மேலும், மாணவர்கள் தலைப்பிற்கு ஏற்ற கருத்துகளை எழுதவில்லை.

தொடர்ந்து, சில மாணவர்களுக்கு எவ்விடத்தில் மொழியணிகளையும் புதிய சொற்களையும் பயன்படுத்த வேண்டும் என்று தெரியவில்லை. பழமொழி, இணைமொழி, திருக்குறள், போன்றவை தலைப்புக்கும் கருத்துக்கும் தொடர்புடையதாக இருத்தல் வேண்டும். சில மாணவர்கள் பொருள் அறியாமலே மேற்கோள்களை எழுதிக் கூற வரும் கருத்தை வேறு திசைக்குத் திருப்பியுள்ளனர். அதுமட்டுமின்றி, மாணவர்களுக்குப் பத்தியமைப்பு முறையைப் பற்றி தெரியவில்லை. பத்தியில் இருக்க வேண்டிய முதன்மை கருத்துகளுக்கு ஏற்ற விளக்கங்களும் உதாரணங்களும் மாணவர்களின் கட்டுரைகளில் சரியாக இல்லை. மேலும், தலைப்புடன் தொடர்பில்லாத கருத்துகளையும் எழுதியுள்ளனர்.

நுண்ணிய வாசிப்புத் தொடர்பான நான்கு வாரக் கற்றல் கற்பித்தலுக்குப் பிறகு, ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களின் அடைவுநிலையில் அதிகமான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பது கண்டறியப்பட்டது. மாணவர்களின் கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்துவதில் நுண்ணிய வாசிப்பு அணுகுமுறையின் பயன்பாடு நல்ல விளைப்பயனை அளித்துள்ளதை இந்த ஆய்வின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

தொடக்கத்தில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களில் 2 மாணவர்கள் C தர நிலையிலும், 4 மாணவர்கள் D தர நிலையிலும் 4 மாணவர்கள் E தர நிலையிலும் இருந்ததாக ஆய்வின் முடிவுகள் காட்டுகின்றன. ஆனால், மாணவர்களிடையே நுண்ணிய வாசிப்பு அணுகுமுறையைப் பயன்படுத்திய பின்னர், மாணவர்களின் அடைவுநிலையில் முன்னேற்றம் இருந்ததை ஆய்வு முடிவுகள் காட்டுகின்றன. நான்கு வாரங்களுக்குக் கற்றல் கற்பித்தலில் ஈடுபட்டப் பின்னர் மாணவர்களின் அடைவுநிலையில் மாற்றம் ஏற்பட்டது. ஒவ்வொரு செயலையும் தொடர்ந்து செய்வதால் நாளடைவில் மாணவர்களுக்கு எளிதாகிறது என்பதை இவ்வாய்வின் வழி காண முடிகிறது. பின்னறித் தேர்வில் 4 மாணவர்கள் ‘A’ தர நிலையிலும், 4

மாணவர்கள் 'B' தர நிலையிலும் 2 மாணவர்கள் 'C' தர நிலையிலான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். முன்னறித் தேர்வில் C, D, E என இருந்த மாணவர்களின் தரம் பின்னறித் தேர்வில் A, B, C என்ற அளவிற்கு முன்னேறி இருந்தது இவ்வாய்வின் மூலம் அறியப்பட்டுள்ளது.

**முன்னறித் தேர்வில் மாணவர்கள் எழுதிய கட்டுரையின் பத்திகளின் உதாரணங்கள்**

**உதாரணம் 1**

மாணவர் 1: காற்றுத் தூய்மைக்கேடு ஏற்படுவதன் காரனம் தொழிற்சாலையிலிருந்து புகை வெளியேறுகிறது. வாகனங்களை நிறைய பேர் பயன்படுத்துவதால் நிறைய புகை வெளியேறும். அணைக்கடந்த வெள்ளம் அழுதாலும் வராது என்பதற்கேற்ப குப்பையைக் குப்பைத்தொட்டியில் பொடாமல் எறிப்பதால் அதிலிருந்து வெளியேறும் நச்சுத் தன்மை கொண்ட புகை காற்றுத் தூய்மைக்கேட்டை ஏற்படுத்துகின்றது'. உதாரணத்திற்கு, இவ்வகையான காற்று நாம் சுவாசிக்கும் காற்றைத் தடுக்கும்.

அட்டவணை 1

'C' தர கட்டுரை பத்தி

| | |
|---|---|
| மொழியணிகள் பயன்பாடு | அணைக்கடந்த வெள்ளம் அழுதாலும் வராது |
| கலைச்சொற்களின் பயன்பாடு | நச்சுத்தன்மை |
| இலக்கணப் பிழைகள் | காரனம் (ண)<br>பொடாமல் (போ) |
| பத்தியமைப்பு முறை | கருத்து<br>- காற்றுத் தூய்மைக்கேடு ஏற்படுவதன் காரனம் தொழிற்சாலையிலிருந்து புகை வெளியேறுகிறது.<br>விளக்கம்<br>- வாகனங்களை நிறைய பேர் பயன்படுத்துவதால் நிறைய புகை வெளியேறும். அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது என்பதற்கேற்ப குப்பையைக் குப்பைத்தொட்டியில் பொடாமல் எறிப்பதால் அதிலிருந்து வெளியேறும் நச்சுத் தன்மை கொண்ட புகை காற்றுத் தூய்மைக்கேட்டை ஏற்படுத்துகின்றது'.<br>உதாரணம்<br>- உதாரணத்திற்கு, இவ்வகையான காற்று நாம் சுவாசிக்கும் காற்றைத் தடுக்கும். |

மேற்கண்ட பத்தி 'C' தரத்தைப் பெற்ற மாணவனின் கட்டுரைகளிலிருந்து எடுக்கப்பட்டப் பத்தியாகும். இப்பத்தி மொழியணிகள் பயன்பாடு, கலைச்சொற்கள் பயன்பாடு, இலக்கணப் பிழைகள் மற்றும் பத்தியமைப்பு முறை போன்ற கூறுகளை அடிப்படையாகக் கொண்டு விளக்கப்பட்டுள்ளது. இப்பத்தியில் 'அணைக்கடந்த வெள்ளம் அழுதாலும் வராது' என்ற மொழியணி சூழலுக்கு ஏற்றவாறு பொருத்தமாகக் கையாளப்பட்டுள்ளது. மேலும், இப்பத்தியில் 'காரனம்' மற்றும் 'பொடாமல்' என்று இரண்டு இடத்தில் மட்டுமே இலக்கணப் பிழைகள் உள்ளது. அச்சொற்களை 'காரணம்' மற்றும் 'போடாமல்' என்று எழுத வேண்டும். மேலும், இப்பத்தியில் ஒரு கலைச்சொல் எழுதப்பட்டுள்ளது. அவை, நச்சுத்தன்மை ஆகும். மாணவர்கள் 'இரசாயணம்' அல்லது 'விஷம்' என்ற சொற்களைத்தான் அதிகமாகப் பயன்படுத்துவர். இந்தப் பத்தியில் 'நச்சுத்தன்மை' என்ற புதிய வார்த்தையைப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்பத்தி கருத்து, விளக்கம், உதாரணம் என சரியான பத்தியமைப்பு முறையில் அமையப்பெற்றுள்ளது. ஆதலால், இக்கட்டுரைக்கு 18 புள்ளிகள் வழங்கப்பட்டு 'C' தரம் வழங்கப்பட்டுள்ளது.

**உதாரணம் 2**

மாணவர் 1: 'இதனால், இவ்வுலகம் தூய்மைகேட்டை ஏற்படுத்துகிறது. இவ்வுலகம் தூய்மைக்கேட்டிலிருந்து தூய்மையான நிலைக்கு ஏற்படுத்துவதற்கு புவியை சுத்தமான வைத்து கொள்ள வேண்டும்'.

அட்டவணை 2

'D' தர கட்டுரை பத்தி

| | |
|---|---|
| மொழியணிகள் பயன்பாடு | இப்பத்தியில் மொழியணிகள் பயன்பாடு இல்லை |
| கலைச்சொற்களின் பயன்பாடு | புவியை |
| இலக்கணப் பிழைகள் | தூய்மைகேடு (க்)<br>சுத்தமான (சுத்தமாக)<br>புவியை (ச்)<br>வைத்து (க்) |
| பத்தியமைப்பு முறை | கருத்து<br>- இவ்வுலகம் தூய்மைக்கேட்டிலிருந்து தூய்மையான நிலைக்கு ஏற்படுத்துவதற்கு புவியை சுத்தமான வைத்து கொள்ள வேண்டும்'.<br>விளக்கம்<br>- எழுதவில்லை<br>உதாரணம்<br>- எழுதவில்லை<br>முடிவு வாக்கியம்<br>- எழுதவில்லை |

மேற்கண்ட பத்தி 'D' தரத்தைப் பெற்ற மாணவனின் கட்டுரைகளிலிருந்து எடுக்கப்பட்டப் பத்தியாகும். இப்பத்தி ஒரு முடிவுரை பத்தியாகும். முடிவுரை பகுதிக்கான தரத்தைக் கொண்டிராத ஒரு பத்தியாகக் கருதப்படுகின்றது. இப்பத்தியில் மொழியணிகள் பயன்பாடு இல்லை. இப்பத்தி இரண்டு வாக்கியங்களைக் கொண்டு மட்டும் அமைக்கப்பட்டுள்ளதால் கருத்துகளுக்கு ஏற்ற விளக்கமும் உதாரணமும் கொடுக்கப்படவில்லை. இம்மாணவர் கட்டுரையில் எழுதிய கருத்துகளைச் சுருக்கி எழுதும் வண்ணம் அமையாததால் முடிவுரைக்கு ஏற்புடையதாக அமையவில்லை. இப்பத்தியில் 'தூய்மைகேடு', 'சுத்தமான', 'புவியை' மற்றும் 'வைத்து' போன்ற சொற்களில் அதிகமான இலக்கணப்பிழைகள் உள்ளன. இச்சொற்கள் அனைத்தையும் 'க்', 'ச்', 'க்' என்று வலிமிகுந்து எழுத வேண்டும். இப்பத்தியில் புவி என்ற கலைச்சொல்லும் எழுதப்பட்டுள்ளது. மாணவர்கள் உலகம் என்ற சொல்லை அதிகமாகப் பயன்படுத்துவதைத் தவிர்த்து 'புவி' என்ற புதிய சொல்லைப் பயன்படுத்தி எழுதியுள்ளனர். ஆதலால், இக்கட்டுரை 13 புள்ளிகள் கொடுக்கப்பட்டு 'D' தரம் வழங்கப்பட்டுள்ளது.

**உதாரணம் 3**

மாணவர் 1: 'ஆகையால், நாம் இந்த உலகத்தை தூய்மையாக வைத்திருப்பதால் சிறியவர்முதல் பெரியவர் முதல் நோய் நொடியுடன் வாழலாம்'.

அட்டவணை 3

'E' தர கட்டுரை பத்தி

| | |
|---|---|
| மொழியணிகள் பயன்பாடு | நோய் நொடி |
| கலைச்சொற்களின் பயன்பாடு | கலைச்சொற்கள் பயன்பாடு இல்லை |
| இலக்கணப் பிழைகள் | உலகத்தை (த்)<br>சிறியவர்முதல் (சிறியவர் முதல்) |
| பத்தியமைப்பு முறை | கருத்து<br>- எழுதவில்லை<br>விளக்கம்<br>- எழுதவில்லை<br>உதாரணம்<br>- எழுதவில்லை |

இந்தப் பத்தியில் தூய்மைக்கேட்டைத் தவிர்ப்பதால் நோய் நொடி இன்றி வாழலாம் என்ற கருத்தை எழுத வேண்டும். ஆனால், இப்பத்தியில் அதற்கான வாக்கியங்கள் எழுதுவும் எழுதப்பட்டிருக்கவில்லை. மாணவர் எழுதிய ஒரு வாக்கியத்திலும் கருத்துகள் இல்லை. மாணவர் எழுதிய வாக்கியமும் தலைப்பிற்கு ஏற்றவாறு அமையவில்லை. இந்தப் பத்தியில் 'நோய் நொடி' என்ற மொழியணி பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்பத்தியில் கலைச்சொற்களின் பயன்பாடு இல்லை. இந்தப் பத்தியில் மாணவர் கூற வரும் கருத்திற்குத் தொடர்பில்லாதவற்றைக் கூறி

கருத்தைத் திசை திருப்பிவிட்டார். ஆதலால், இக்கட்டுரைக்கு 6 புள்ளிகள் கொடுக்கப்பட்டு 'E' தரத்தைக் கொண்டுள்ளது.

**பின்னறித் தேர்வில் மாணவர்கள் எழுதிய கட்டுரையின் பத்திகளின் உதாரணங்கள்**

**உதாரணம் 1**

மா ணவர் 1: 'தூய்மையான சுற்றுச்சூழலால் நாட்டின் வருமானமும் பெருக வாய்ப்பிருக்கின்றது. அழகுக்கு அழகு சேர்ப்பது போல நம் நாட்டில் தூய்மையாகவும் அழகாகவும் இருக்கும் சுற்றுச்சூழல்தான் வெளிநாட்டவரின் கவனத்தை ஈர்க்கும். சுற்றுச்சூழலைப் அயராது பாதுகாத்து இயற்கை எழிலை நிலைநாட்டினால் நாட்டிற்கு வரும் சுற்றுப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். இதனால், நம் நாட்டின் பொருளாதாரம் மட்டுமின்றி வேலை வாய்ப்பும் பெருகும்'.

அட்டவணை 4

'A' தர கட்டுரை பத்தி

| | |
|---|---|
| மொழியணிகள் பயன்பாடு | அழகுக்கு அழகு சேர்ப்பது போல |
| கலைச்சொற்களின் பயன்பாடு | அயராது<br>எழிலை |
| இலக்கணப் பிழைகள் | இலக்கணப் பிழைகள் இல்லை |
| பத்தியமைப்பு முறை | கருத்து<br>- தூய்மையான சுற்றுச்சூழலால் நாட்டின் வருமானமும் பெருக வாய்ப்பிருக்கின்றது.<br>விளக்கம்<br>- அழகுக்கு அழகு சேர்ப்பது போல நம் நாட்டில் தூய்மையாகவும் அழகாகவும் இருக்கும் சுற்றுச்சூழல்தான் வெளிநாட்டவரின் கவனத்தை ஈர்க்கும்.<br>உதாரணம்<br>- சுற்றுச்சூழலைப் அயராது பாதுகாத்து இயற்கை எழிலை நிலைநாட்டினால் நாட்டிற்கு வரும் சுற்றுப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்.<br>- இதனால், நம் நாட்டின் பொருளாதாரம் மட்டுமின்றி வேலை வாய்ப்பும் பெருகும்'. |

இப்பத்தியில் மா1 சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதால் ஏற்படும் நன்மைகளைப் பற்றி எழுதியுள்ளார். இப்பத்தியில் தூய்மையான மற்றும் அழகான சுற்றுச்சூழலை வர்ணிக்கும் வகையில் 'அழகுக்கு அழகு சேர்ப்பது போல' என்ற உவமைத்தொடர் மொழியணியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்பத்தியில் மாணவர் 'அயராது' மற்றும் 'எழிலை' என்ற கலைச்சொற்களையும் பயன்படுத்தியுள்ளனர். மேலும், இதன் பத்தியமைப்பு முறையும் மிகச் சரியாக அமைந்துள்ளது. மாணவர் நாட்டின் வருமானம் பெருக வாய்ப்பிருக்கின்றது என்ற கருத்துக்கு அழகான சுற்றுச்சூழல் வெளிநாட்டவரின் கவனத்தை ஈர்த்து நம் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படைய செய்யும் என்று விளக்கமளித்துள்ளார். ஆதலால், இக்கட்டுரைக்கு 25 புள்ளிகள் வழங்கப்பட்டு 'A' தரம் வழங்கப்பட்டுள்ளது.

**உதாரணம் 2**

மா ணவர் 1: 'காற்றுத் தூய்மைக்கேடு என்றால் புகையினால் ஏற்படும் விளைவுகள் ஆகும். உதாரணத்திற்கு, வாகனங்களிலிருந்து ஏற்படும், தொழிற்சாலையிலிருந்து வெளியாகும் புகை, மற்றும் இன்னும் பல இடங்களிலிருந்து வெளியேறும் புகைகள் ஆகும். இதனால் மானிடர்கள் நோய் நொடியுடன் சிரமப்படுகிறார்கள். இன்றைய கால மக்களின் அலட்சிய போக்கினால் பிரணவாயுவாக இருந்த காற்றுகள் கரிமிளவாயுவாக மாறிவிட்டன. உதாரணத்திற்கு, கடந்த மாதம் சீனாவில் 'Duolin' என்ற தொழிற்சாலையிலிருந்து வெளியேறிய புகை மக்களிடையே நோய்களை பரப்பியது'.

அட்டவணை 5

'B' தர கட்டுரை பத்தி

| | |
|---|---|
| மொழியணிகள் பயன்பாடு | நோய் நொடி |
| கலைச்சொற்களின் பயன்பாடு | மானிடர்கள்<br>பிராணவாயு<br>கரிமிளவாயு |
| இலக்கணப் பிழைகள் | நோய்களை (ப்) |
| பத்தியமைப்பு முறை | கருத்து<br>- காற்றுத் தூய்மைக்கேடு என்றால் புகையினால் ஏற்படும் விளைவுகள் ஆகும்.<br>விளக்கம்<br>- இதனால் மானிடர்கள் நோய் நொடியுடன் சிரமப்படுகிறார்கள்.<br>- இன்றைய கால மக்களின் அலட்சிய போக்கினால் பிரணவாயுவாக இருந்த காற்றுகள் கரிமிளவாயுவாக மாறிவிட்டன.<br>உதாரணம் |

| | |
|---|---|
| | - உதாரணத்திற்கு, வாகனங்களிலிருந்து ஏற்படும், தொழிற்சாலையிலிருந்து வெளியாகும் புகை, மற்றும் இன்னும் பல இடங்களிலிருந்து வெளியேறும் புகைகள் ஆகும்.<br>- கடந்த மாதம் சீனாவில் 'Duolin' என்ற தொழிற்சாலையிலிருந்து வெளியேறிய புகை மக்களிடையே நோய்களைப் பரப்பியது'. |

இப்பத்தியில் ஒரே ஒரு இலக்கணப்பிழை மட்டுமே உள்ளது. அவை, 'நோய்களை' என்ற சொல்லுக்குப் பின் 'ப்' என வலிமிகுந்து எழுத வேண்டும். இப்பத்தியில் 'மானிடர்கள்', 'பிராணவாயு' மற்றும் 'கரிமிளவாயு' என்ற கலைச்சொற்களின் பயன்பாடு ஏற்புடையதாக அமைந்துள்ளது. மாணவர்கள் 'மனிதர்கள்' என்ற சொல்லை அதிகமாகப் பயன்படுத்தும் நிலையில் இம்மாணவர் 'மானிடர்கள்' எனப் பயன்படுத்தியுள்ளார். இக்கட்டுரையில் உள்ள 'காற்றுத் தூய்மைக்கேடு என்றால் புகையினால் ஏற்படும் விளைவுகள் ஆகும்.' என்ற கருத்துக்கு 'இதனால் மானிடர்கள் நோய் நொடியுடன் சிரமப்படுகிறார்கள்.' மற்றும் 'இன்றைய கால மக்களின் அலட்சிய போக்கினால் பிரணவாயுவாக இருந்த காற்றுகள் கரிமிளவாயுவாக மாறிவிட்டன.' என்ற ஏற்ற விளக்கங்களும் எழுதப்பட்டுள்ளன. ஆதலால், இக்கட்டுரைக்கு 23 புள்ளிகள் வழங்கப்பட்டு 'B' தரம் வழங்கப்பட்டது.

**நுண்ணிய வாசிப்பு அணுகுமுறையின் மீதான மாணவர்களின் கண்ணோட்டம்**

இவ்வாய்வில் மேற்கொண்ட கற்றல் கற்பித்தலுக்குப் பின் மாணவர்களிடையே நுண்ணிய வாசிப்பு அணுகுமுறையின் மீதான கண்ணோட்டத்தைக் கண்டறிய கருத்தறி வினா பெரிதும் துணைப்புரிந்தது. கருத்தறிவினா நிரல் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 10 மாணவர்களுக்கும் வழங்கப்பட்டன. இக்கேள்விகள் அனைத்திற்கும் மாணவர்கள் குறைவு, நடுநிலைமை, அதிகம் என்பதில் ஏதேனும் ஒன்றிற்குப் பதில் அளித்தனர்.

கருத்தறிவினாவின் முதல் கேள்வியான "நுண்ணிய வாசிப்பைக் கற்றுக் கொண்ட பின் எனக்கு வாசிப்பதற்கு மிகவும் பிடிக்கும்." எனும் கேள்விக்கு 8 மாணவர்கள் (80%) அதிகம் என்ற பதில்களை தேர்ந்தெடுத்துள்ளனர். இக்கேள்விக்கு 2 மாணவர்கள் (20%) நடுநிலைமை என்ற பதில்களை தேர்ந்தெடுத்துள்ளனர்.

தொடர்ந்து, இரண்டாவது கேள்வியான "நுண்ணிய வாசிப்பு அணுகுமுறையானது வாசிப்பதற்கு ஒரு புதிய அணுகுமுறையாகத் திகழ்கின்றது." எனும் கருத்தறிவினா கேள்விக்கு 8 மாணவர்கள் (80%) அதிகம் எனும் பதிலையும் 2 மாணவர்கள் (20%) நடுநிலைமை எனும் பதிலையும் தேர்ந்தெடுத்துள்ளனர். மேலும், மூன்றாவது கேள்வியான "நுண்ணிய வாசிப்பை என்னால் வாசிப்புப் பகுதிகளில் அமல்படுத்தி வாசிக்க முடிகின்றது." எனும் கேள்விக்கு 7 மாணவர்கள் (70%) அதிகம் எனும் பதிலையும் 2 மாணவர்கள் (20%) நடுநிலைமை எனும்

பதிலையும் தேர்ந்தெடுத்துள்ளனர். ஒரே ஒரு மாணவர் (10%) குறைவு என்ற பதிலை வழங்கியுள்ளார்.

நான்காவது கேள்வியான "நுண்ணிய வாசிப்பின் வழி ஒரு முழுமையான வாசிப்புப் பகுதியை எளிதில் புரிந்துகொள்ள முடிகின்றது." எனும் கேள்விக்கு 9 மாணவர்கள் (90%) அதிகம் எனவும் 1 மாணவர்கள் (10%) நடுநிலைமையிலான பதிலை வழங்கினர். இக்கருத்தறி வினாநிரலின் இறுதி கேள்வியான "நுண்ணிய வாசிப்பு அணுகுமுறை நான் கட்டுரை எழுதுவதற்கு உதவியாக அமைகின்றது." என்ற கேள்விக்கு 9 மாணவர்கள் (90%) அதிகம் எனவும் 1 மாணவர் (10%) நடுநிலைமை எனவும் பதிலளித்துள்ளனர். ஆதலால், மாணவர்களின் கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்துவதற்கு நுண்ணிய வாசிப்பு ஓர் ஊன்றுகோலாக அமைந்தது என்பது மாணவர்களின் பதில்களின் வழி கண்டறியப்பட்டது.

## தொகுப்புரை

சுருங்கக்கூறின், இரண்டாம் படிவ மாணவர்கள் இலகுவான முறையில் தரமான கட்டுரைகளை எழுதுவதற்கு நுண்ணிய வாசிப்பு அணுகுமுறையும் புளூம் கோட்பாட்டின் பயன்கொள்ளல் படிநிலையும் துணைப்புரிகின்றது. ஆகவே, ஆய்வின் முடிவில் குறிப்பிட்டதைப் போலவே மேலும் பல உத்திமுறைகளைக் கையாண்டு மாணவர்களை ஈர்க்கும் வகையிலான கற்றல் கற்பித்தல்களை ஆசிரியரால் மேற்கொண்டால் மாணவர்களின் கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்த முடியும். இஃது அவர்கள் தேர்வில் வழிகாட்டி கட்டுரைக்கும் திறந்த முடிவுக் கட்டுரைக்கும் விடையளிக்க உதவும்.

## துணைநூற்பட்டியல்:

1. Kementerian Pelajaran Malaysia. (2017). Dokumen Standard Sekolah Menengah Bahasa Tamil Tingkatan 1. Kuala Lumpur: Bahagian Pembangunan Kurikulum
2. Kementerian Pelajaran Malaysia. (2018). Dokumen Standard Sekolah Menengah Bahasa Tamil Tingkatan 2. Kuala Lumpur: Bahagian Pembangunan Kurikulum
3. Arivunambi. A (2006). Students' errors and remedies in Tamil language essay. 7th World Tamil Teachers Conference
4. Rajendran.N.S. (2008). Tamil Education and Teaching in Malaysia. Kuala Lumpur. Uma Publications.
5. Balasubramaniam.S. (1994). Article Resources. Chennai. Narumalar Publications.
6. Moreillan, J. (2007). Collaborative Strategies for Teaching Reading Comprehension. Maximizing Your Impact. (Strategi Kolaboratif untuk Pengajaran Pemahaman Membaca. Memaksimumkan Kesan Anda). Chicago: American Library Association.

7. Mohathir Jamaluddin. (2000). Using Process Approach to develop writing skills Among Form1 students. (Menggunakan Proses Pendekatan untuk Membangunkan Kemahiran Menulis Antara Pelajar Tingkatan 1). Perak. Universiti Pendidikan Sultan Idris.